REGD No. M. 4642

திராவிட நாடு

விலை அணா 2.
சிலோன் 15 சதம்

மலர் 10. | 1—7—51 | இதழ்

புகார்

அரங்கண்ணல்

சங்கு, பவளம்
கிய வற்றை
றத்துக் கடை
வாரின் இல்லங்
ளிலிருந்து எழும்
ம் பேரொலி!
த்து எடுத்து,
டல் நிரைக்கட
பூவாது வரும்
தலைனக் கண்டு 'அத்தான்
ந்துவிட்டார்' என்று. அங்கு
ங்கும் ஓடும் பெண்களின்
ளையல் சப்தம்! இன்னிசைப்
ணரின் வீடுகளிலிருந்து எழும்
ம் யாழொலி! 'மதயானை அடக்கிய
ாவீரர், என் மகன், என்று
பருமை பேசும் வீரத்தாய்களின்
ன்புப்பேச்சு! படைப்பயிற்சி பெற
ால் வீரர்களிடையே எழும்பும்
ள் ஒலி! குதிரைகளின் குளம்
டிச்சப்தம்! யானைகளின் முழக்கம்!
தாட்டத்து மலர்களைத் தம் அங்
கையால் அழகு மாலையாக்கும் ஆட
ர், பெண்டிர். ஆகியோரின் விளை
ாட்டுப் பேச்சு! அரசன் மனை
யிலே எழும்பும், வீரப்பாடல்கள்!
வெற்றிபற்றிப் பேசிக் களிக்கும்
வீராதி வீரர்களின் வீதிகள்! வியா
பார நுணுக்கங்களை விவாதித்துக்
கிடக்கும் வணிக மக்கள் வாழும்
தெருக்கள்!

[நமது கண்கள் இக்காட்சிகளால் பூத்துப் போகின்றன! பொன் கொண்டிழைத்த நகரமோ, மின்னல் கொண்டு சமைத்த மாளிகையோ, அழகு வளரும் தோட்டமோ, என் றெல்லாம் எண்ணுகிறோம். அந்த நினைப்பிலே, நகரின் மற்றோர் பகுதிக்குச் செல்கிறோம். அங்கே]

"பிட்டு வாங்களீயோ, பிட்டு!"— அதோ ஒரு சிறு கடை. அங்கே, பலர் ஆவலோடு பிட்டுண்ண, அவர்களுக்கு பிட்டளிப்பதே பெரிய பாக்கியம் என்ற எண்ணத்தோடு அமர்ந்திருக்கிறார். ஒரு மூதாட்டி. அதற்கு அப்பால், அதோ, மீன் சந்தை! கடலிலே துள்ளிக்குதித்த மீன் வகைகள் மலைமலையாகக் குவிந்து கிடக்கின்றன. 'மீனக்கண்கள் என்கிறார்களே—இதுதானோ?' என்று மீனை ஒரு கண்ணாலும் தன் காதலியின் வேல்விழியை இன்னொரு கண்ணாலும் ஒப்பிட்டுப் பார்க்கும் பலருடைய உரையாடல்கள்! உப்பளத்திலிருந்து உப்பைக் கொண்டுவந்து குவித்து வைத்திருக்கும் அழகிய காட்சி! தாம்பூலம் தரிக்க, அங்கே அடுக்கப்பட்டிருக்கும் கொழுந்து வெற்றிலைக் கட்டுகள்! சித்திர வேலைப்பாடு அமைந்த தச்சுப் பொருள்கள்! வண்ணமும் சுண்ணமும், பூவும் சந்தனமும் விற்போரின் அற்புதக் காட்சி! 'அழகான பட்டு — வேண்டுமோ?' என்று விலை கூறுவோர். 'இல்லை! எலிமயிராடை உளதோ?' என்று, கேட்போர். 'உண்டு' என்று வாயால் சொல்லாது, கர்வத்தோடு கண்ணால் எதிரே அடுக்கப்பட்டிருக்கும் உயர்ந்த துணிமணிகளைக் காட்டுவோரின் பெருமிதம்!

[நமது ஆனந்தம், அதிகமாகிறது. மேலும் நடக்கிறோம். மாட மாளிகைகள், கூட கோபுரங்கள் மறைகின்றன. ஆனால் அவைகளை நிகர்த்த மரங்களின் வரிசை தென்படுகிறது, இரண்டு மன்னர்களின் படைவரிசைபோல, இரு மருங்கும்! மேலும் செல்கிறோம். அதோ; பல மண்டபங்கள் காட்சி தருகின்றன.]

"பெரியீர்! இதென்ன இடம்?"

"மாநீர் வேலி வச்சிர நன்னாட்டுக் கோன்றை கொடுத்த கோற்றப் பந்தர்........"

"அப்படியா? அது......"

"மகத நன்னாட்டு வாள்வேய் வேந்தன் பகைபுறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்......"

"ஓகோ! அதோ, தெரிவது...?"

"அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த நிலந்தொங்கு மரபின் தோரணவாயில்......"

பெரியவர் பேசுகிறார், இந்த மண்டபங்கள் வடவேந்தரால், எமது மன்னனின் வெற்றிக்கு அடையாளமாக அமைக்கப்பட்டவையென்று. நமது, வியப்பு அதிகமாகிறது! "யார்? கரிகாலச் சோழனா?" என்று கேட்கிறோம்.

"ஆமாம்—எமது திருமாவளவன்தான்" என்கிறார், பெருமையோடு.

திருமாவளவன்— கேட்கும்போதே இப்பெயர், நம் செவியிலே தேனாகிப் பாய்கிறது. கரிகாலச் சோழன் புகழ், நமது கருத்துக்களைக் கிளறுகின்றன. அவன் ஆண்ட, இந்த அழகிய நகரம். காவிரி கடலோடு கலக்கும் திரு இடம், அழகுச் சோலை, காவிரிப் பூம்பட்டினம் நம் கவனத்தை அள்ளுகிறது. சிலப்பதிகார ஏட்டினைப் புரட்டினால், புகார்க்காண்டம் புகுந்தால் நமது எண்ணங்கள் முரசொலி எழுப்பும்! வீரக்காதைகள், வெற்றி விளக்கங்கள், மன்னாதிமன்னர்களின் பெருமை—அப்பப்ப, நினைத்தாலே நெஞ்சு விம்மும். சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்புச் சோழமன்னன் கரிகாலனின் படைகள், வடஇமயத்திலே உலவுகின்றன! ஆகாயமளாவி நிற்கும் அம்மலையையும் தாண்டிட வேண்டுமெனும் ஆசையோடு, உலவுகின்றனர் வீரர்கள். அவர்கள் கையிலே ஏந்திய புலிக் கொடிகள்! அவைகளின் நிழற்பட்டு அலறும், ஆரிய மன்னர்கள்! பழைய சரித்திரம்— நமது, தீச்சுழலான நம் இதயத்திலே தேன்மழை பொழிவது.

கரிகாலன், இமயத்திலே புலிக்கொடி பொறித்தான். வஜ்ஜிரநாட்டு மன்னனின் தலை, அவன் காலிலே கிடந்தது! மகதமன்னன் மண்டியிட்டான்! அவந்தி வேந்தன் அடிமையானான்! வடவேந்தர்களை வென்று, அந்த வெற்றிச் சின்னங்களாக பூம்புகார் நகரிலே மண்டபங்கள் எழும்பின. தமிழக மண்ணின் பெருமை வடவாரியரை நிலைகுலையச் செய்தது!

வீரமும் செல்வமும் சேர்ந்து கிடந்தது, பூம்புகார் நகரம்.

தமிழ்த்தாயின் மார்புக்குக் கிடைத்த மணியாரம் சிலப்பதிகாரம். காவிரிப்பூம் [illegible]

தரும் காட்சி, நம்மை அள்ளும். நெஞ்சை, குதூகலத்தில் ஆழ்த்தும்.

நமது பழம் வாழ்வு! மாற்றானுக்குத் தலைவணங்கா மாப்புகழ்! நமது மன்னாதி மன்னர்களின் திருப்புகழ்! நமது தமிழக வீதி, அங்கே குவித்த முத்தும் பவளமும் மோசனப் பொன்னும்!

காவிரிப்பூம்பட்டினம் — நமது இனவரலாற்றுக்கு, ஓர் அரங்கம். நமது பெருமையைச் சித்தரிக்கும், நல்லோவியம்.

ஆனால், அந்த எழிற் பூம்புகார் இன்றுள்ள நிலை!

ஐயோ! நினைக்கவே முடியவில்லை...!

அரசவீதிகள் நிரம்பிய பட்டினப் பாக்கம் உருவோடு இல்லை.

வீரரும் வணிகரும் உலவிய மருவூர்ப்பாக்கம்—காணமுடியவில்லை

காவிரிப்பட்டினம், ஒரு மாபெரும் மன்னர் பரம்பரையின் தலைநகர்—முன்பு.

இப்போது, ஒரு சிறு குக்கிராமம்.

மாபெரும் நகர், சிறுகிராமமாகிக் கிடக்கிறது — மேகங்களிடையே மறைந்த நிலவைப் போல.

காலப் புயல், நமது காவிரிப்பூம்பட்டினத்தை, அழித்துவிட்டது. மாடமாளிகைகள், இப்போது மண்மேடுகள்! கூடகோபுரங்கள் குட்டிச்சுவர்களாகி விட்டன! மன்னன் மனை-இப்போதுமண்ணுக்கடியிலே! அழகு நகரம், கடல் மாதாவால், தழுவிக்கொள்ளப் பட்டுவிட்டது. மனித அலைகள் மட்டுமல்ல கடல் அலைகளும் அம்மாநகரை அழித்துவிட்டன.

புகார், இன்று வாழ்விழந்து போன விதவை, அல்ல. உயிரிழந்து, உடல் கரையானால் கரைக்கப்பட்டு, எலும்புக்கூடாகி, பிறகு எலும்பும் சிதறி துண்டு துண்டாகிப் போனால் எப்படியிருக்குமோ, அதுபோலக் கிடக்கும், ஒரு கோர ஊர்.

இன்று நாம் அங்கே காண்பது, சிதறிய ஒரு எலும்பு — தேய்ந்து மாய்ந்துபோன நம் வாழ்வின், வேதனை!

வேதனை விளையாடும் அந்தக் காவிரிப் புகும் நகரிலே, அண்மையில், நம்மவர் (வேறு யார் வருவர்? [illegible]

வேதனைக் குரல் எழுப்பியிருக்கி றனர்.

சிலம்பை அணிந்துப் பார்த் பார்த்து மகிழும் வசதி நிரம்பி கோவைச் சீமான், ஆர். கே. ச முகம் அவர்கள், அங்கே பே னாராம்:

"இந்திய நாட்டின் சரித்திரத் எழுதப் புகும்போது வடக் லிருந்து ஆரம்பித்து எழுதி வ கின்றனர். ஆனால் அது நமது நா டின் தெற்கு முனையிலிருந்துதா எழுதவேண்டும். அதுதான் உ மையான சரிதமாகும். இந்திய ச காரின் புதைபொருள் இலாகாவா இதுவரை சேர சோழ பாண்டி நாடுகளைப் பற்றி ஒன்று ஆராய்ச்சி செய்யவில்லை. இது மி மிக வெட்கப்பட வேண்டியதாகும் என்று பேசியிருக்கிறார். அதோ அந்த மாநாட்டில் ஒரு தீர்மானமு நிறைவேற்றப் பட்டிருக்கிற "நமது சர்க்கார் தற்போது வெ யிட்டுள்ள ஆராய்ச்சிப் புத்தகத்தி நம் தமிழ் நாட்டைப் பற்றி ஒ றுமே கூறாது விடுத்திருப்பதை கண்டு இம்மாநாடு வருந் கின்றது."

வருந்தியிருக்கிறார்கள்! கூடியோர் மரத்தமிழர்க ளல்லவே — ஆகவே வருந்தி யிருக்கிறார்கள். இப்போ தாவது இந்த வருத்தம் ஏற்பட் டதே, அதுவரையில் மகிழ்ச்சிதான் நாம், இதே வருத்தத்தை முன் எடுத்துச் சொன்ன போதெல்லாம் சீறியோர்தான்— அங்கே கூடியோ ரில் பலர். ஆயினும் மகிழ்கிறோம் நாம் அன்று சொன்னோம்; இன்று இவர்கள் சொல்கிறார்கள் என்ப தால்! வருந்தியதோடு; போய்விட வில்லை, மாநாட்டுக்காரர்கள். வேண் டிக்கொண்டு மிருக்கிறார்கள், இன் னொரு தீர்மான மூலமாக.

"பூம்புகார், போன்ற இடங்களில் இந்திய சர்க்காரின் புதைபொருள் இலாகா ஆராய்ச்சி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறது— இம்மாநாடு."

இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்கள் கேட்டுக் கொண்ட தேதி ஜூன் 18.

ஆனால் இதற்கு முன்பாகவே,

விலும் சிறந்த மற்றெரு அறி
, இந்திய சர்க்காரைக் கேட்
க்கிருர்—ஒரு கடித மூலம்.

அண்ணமலைப் பல்கலை கழகத்
ண வேந்தர் பேரறிஞர் மணவாள
ானுஜம் மார்ச் 9-ந்தேதி அன்று,
திய சர்க்காருக்கு ஒரு கடிதம்
திஞராம், பூம்புகார் சம்பந்த
க. அக்கடிதத்தில் காவிரிப்பூம்
டினத்தின் பழஞ் சிறப்பு, இன்
ய கேடு ஆகியவைகளை யெல்
ம் விளக்கிவிட்டு, "பழைய நக
ஒரு பாகம் கடலில் மூழ்கிக்
ப்பதாக செம்படவரும் ஸ்தல
களும் கூறுவதில் நம்பிக்கை
வத்து, திருப்தி யேற்பட்டால்,
ப்பிரதேசத்தில்ஜலத்தின் கீழிருப்
னவற்றைப் படம் பிடித்துப் பார்க்
வும் சப்மரீன்கள் மூலமும் இதர
மூழ்கிக் கப்பல்கள் மூலமும்
ப்பிரதேசத்தை, ஆராய்ந்து அறி
வும் பாதுகாப்பு இலாகா முயற்சி
சய்யவேண்டு மென்றும் யோசனை
றுகிறேன். இந்த ஆராய்ச்சியால்
ாதனத் தமிழர்களின் வாழ்க்கை,
ழக்க வழக்கங்கள் பற்றிய சரித்
ரக் குறிப்புகள் கிடைக்கும்.
கவே, மிகவும் கவனிக்கவேண்
பதாகும் இது. இது சம்பந்தமாக
ந்திய சர்க்கார் மேற்கொள்ளும்
ந்த நடவடிக்கைக்கும் அண்ணா
லைப் பல்கலைக் கழகம் மகிழ்வோடு
த்துழைக்கும். ஆகவே, அசிரத்தை
காள்ளாது வேண்டிய நடவடிக்கை
ள எடுக்குமாறு வேண்டிக்கொள்
றேன்."

அண்ணமலைப் பல்கலைக் கழகத்
ணைவேந்தர், வலுவில் சென்று,
வண்டியிருக்கிறார்.

ஆனல் அதற்கு ஏப். 30-ந் தேதி
ந்திய சர்க்காரிடமிருந்து பதில்
ந்திருக்கிறது:

"காவிரிப்பூம் பட்டினத்தைக்
ண்டு பிடிப்பதற்கான கப்பலோ
ல்லது வேறு சாதனமோ எங்க
டம் இல்லை. ஆனல் கண்ணாடியா
ன அடியுடன் கூடிய மரக்குழாய்
ல்லது மரவாளியை உபயோகித்
ப் பார்க்கலாமென்று யோசனை
றுகிறோம். தண்ணீர் அமைதியாக
ருந்தால் நல்ல வெளிச்சத்தில்
ீழ இருப்பனவற்றை ஜலக் கண்
டியின் உதவியால் பார்ப்பது
த்தியம். ஆனல் புகைப்படம்
டுக்க முடியாது."

துணை வேந்தர் வேண்டினர்!

கிடைத்த பதில், இது!!

இந்திய சர்க்காரே முயற்சி எடுக்க வேண்டும், அதற்கான புதை பொருள் இலாகாவும் அவர்கள் வசமே இருக்கிறது என்று துணை வேந்தர் எழுதினர். அதற்கு நமது மாட்சிமை பொருந்திய டில்லி பதில் தருகிறது:

சாதனம் இல்லை.

யோசனை சொல்கிறோம்.

முடியாது.

* * *

எனினும் புகாரிலே கூடியோர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள், இந்திய சர்க்காருக்கு.

ஒரு பல்கலைக் கழகத் துணை வேந்தர் தமது உதவியெல்லாம் அளிப்பதாகக் கூறியும், இத்தகைய பதில் கிடைத்திருக்கும் போது, இவர்களுக்கு மட்டும் வேறென்ன பதில் கிடைக்கும்?

சண்முகனர் கூறியது போல, டில்லி சர்க்காருக்கு, தமிழக வரலாறுகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வம் இல்லை. இருக்கவும் முடியாது!

ஏனெனில் தமிழரின் வரலாறு, இதுவரை எவராலுமே மோதப்பட்டது கிடையாது.

அக்பரைத் தெரிந்த அளவுக்கு அனபாயச் சோழனைப் பற்றி நாம் அறிவதற்கில்லை. காஞ்சியில் குலோத்துங்க மன்னன் ஆண்ட அரண்மனை, மதுரைப் பாண்டியரின் வாழ்க்கைகள், திருவண்ணமலையின் சிறப்பு, திருவாரூர் அரண்மனையின் சரிதம், உறையூரின் புகழ், வஞ்சிமா நகரின் வரலாறு, மாமல்லபுரத்தின் மாட்சி, செஞ்சி தரும் செய்தி, தஞ்சை மண்ணிலே மறைந்து கண்டுபிடிக்கப்பட்டது போக எஞ்சியவை, திருச்சி சரித்திரம், திருவரங்கத்தின் சரித்திர திருவிளையாடல் ஆற்காட்டு ஆட்சி எதுவுமே அந்த நாள் முதல் தொடர்ந்து தெளிவாகத் தெரிவதற்கில்லை.

நமதுநாட்டிலே உள்ள ஒவ்வொரு ஊரும் சரித்திரத்தின் காலடி பட்டவை. ஆனல் அதுபற்றி எள்ளளவும் நாம் அறிவதற்கில்லை.

இடிந்துபோன கோட்டை கொத்தளங்கள்! பாழ்தேய்ப்போன கோயில் கல்வெட்டுகள்! மண் மேடுகள்! அழிந்துபோன சிலா சாசனங்கள்! இவைகளே, நமது வரலாற்றின் சின்னங்களாக நிற்கின்றன!

நமது வாழ்வு சிதைந்து சீர்குலைந்தது போல, நிற்கும் இவைகளின் நிழலிலே மறைந்து கிடக்கும் சரிதச் சம்பவங்கள் ஆயிரமாயிரம்.

ஆனல் அவை யாவும், வெளவால் தூங்கவும், பிச்சைக்காரர்கள் மடமாகவும், பறவைகள் கூடாகவும் கிடக்கின்றன.

இவைகளைத் துருவி ஆராய்ந்தால் எவ்வளவோ இரகசியங்கள் வெளியாகும்! நமது சேர–சோழ–பாண்டியர் வரலாறு சம்பந்தமான ஆதாரங்கள் கிடைக்கும்.

ஆனல் எங்கே செய்கிறது, சர்க்கார்!

நல்லறிவாளர்களான மறைந்த எஸ். கே. கோவிந்தசாமியார், தற்போதைய அண்ணமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் சதாசிவ பண்டாரத்தார் ஆகியோர், தமிழகச் சரித்திரம் தர முயன்றும், பல இடங்களில் தெளிவுகாண முடியாது, திகைக்கவல்லவோ நேரிடுகிறது.

எவ்வளவு பெரிய சமுதாயம், இது. எவ்வளவு வீரர்கள் விளையாடிய நாடு இது. அகமும் புறமும் அணைந்து கிடந்த தமிழ் மண்—இன்று சரித்திர மில்லாப் பூமி!

வெட்கக் கேடானதல்லவா?

நமது மன்னர்களைப் பற்றி நாம் அறிய முடிவதற்கில்லை. நமது வீரர்கள் வாழ்வை, சங்க இலக்கியம்

(9-ம் பக்கம் பார்க்க)

உண்மை!

"சில செல்வாக்குள்ள வோட்டர்கள் சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கும் அங்கத்தினர்கள் தங்களுடைய ஏஜண்டுகளென கருதுகின்றனர்."

"சட்டசபை அங்கத்தினர்கள் தங்கள் சொந்த விஷயங்களில் அனுகூலமான காரியங்களைச் செய்யும்படி எதிர்பார்க்கிறார்கள்"

ஜூன்-19

நிதி அமைச்சர் கோபாலர்
—சென்னை ஒய். எம். சி. ஏவில்.

★ மத்தியபீடம் ★

—✕✕✕—

சுதந்திரம் என்கிற சொல் சுக போகிகளின் கையில் சிக்கிவிட்டால் ஆபத்து அதிகமாகும், கேடு சூழும்.

இந்தக் காட்சி, காங்கிரஸ் ஆட்சியில் உலகமே அறிந்துகொண்டுவிட்டது.

அதை மேலும் உறுதிப் படுத்துவது போல, ஜூன் 20ந் தேதியன்று புதுடில்லியிலிருந்து உத்திரவொன்று புறப்பட்டு சிம்லாவுக்குச் சென்றிருக்கிறது.

மத்திய சர்க்கார் தலைவர் ராசேந்திரர், கீழ் பஞ்சாபுக்கு அனுப்பிய கட்டளைதான் அது.

கீழ் பஞ்சாபின் ஆட்சியை ஏற்று நடத்துமாறு, அம்மாகாண கவர்னர் சாந்துலால் திரிவேதி பணிக்கப்பட்டுள்ளார்.

கீழ் பஞ்சாபில், காங்கிரஸ்காரர்கள் நிரம்பிய சட்டசபை இருக்கிறது. அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபையும் இருந்தது.

ஆனால், இவை யாவும் இப்போது, தேவையற்றவையாகிவிட்டன. மாகாண மந்திரிகளோ, இனி கீழ்ப் பஞ்சாப் விவகாரங்களில் தலையிட முடியாது.

கோபிசந்த் பார்கவா என்பவருடைய மந்திரி சபை, காங்கிரஸ் மேலிடத்தின் கட்டளைப்படி, விலகிவிட்டது.

ஆனால், புது மந்திரி சபை அமைக்கப்படவில்லை. கவர்னர் ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது.

கீழ் பஞ்சாப் சட்ட சபையில் பெரும்பாலானோர், காங்கிரசார் தான். எனினும், அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்க, தகுதியில்லை என்று காங்கிரஸ் மேலிடம் முடிவு செய்திருக்கிறது.

கீழ் பஞ்சாபில், மந்திரி சபைத் தகராறுகள் அதிகமானதற்குக் காரணம், காங்கிரசாரிடையிலே பல கோஷ்டிகள் உண்டானதும், ஒவ்வொன்றும் பதவிப் பித்துப்பிடித்து ஆடியதுமே யாகும்.

ஆடினோர்—காங்கிரசார். அவர்கள் தறுதலைப் போக்கைக் கண்டித்து ஒடுக்கவேண்டிய மத்திய சர்க்காரோ, கவர்னர் பொறுப்பேற்கு மாறு உத்திரவிட்டு விட்டது.

கவர்னரோ மாகாண ஆட்சியின் பொறுப்பாளியென்றால், அம்மாகாணத்தின் சகல நடவடிக்கைகளும் இந்திய குடியரசுத் தலைவராலேயே நடைபெறலதாகவே பொருள்.

அதோடு, மேற்படி மாகாணம் பற்றி இந்திய டில்லி சபைக்கு உரிமையுண்டே யொழிய மாகாண சட்ட சபைக்கு எவ்விதத் தொடர்பும் கிடையாது.

அதாவது, முன்பிருந்த மாகாண சர்க்காரின் பொறுப்புகள் இப்போது இல்லை.

அவைகள் மத்திய பீடத்துக்குப் போய்விட்டன.

சுருங்கச் சொன்னால் மாகாண சுயாட்சி என்பது புதைகுழிக்குப் போய்விட்டது.

ஜனநாயக காலத்தில், இது, அழியாத அவமானம். துடைக்கமுடியாத மாசு.

அதுவும், மக்களாட்சி பற்றிப் பேசியோரே, மக்களாட்சியை மதிக்கவில்லை. மந்திரி சபைக்குப் பதில், கவர்னரே ஆள்கிறார்.

* * *

இந்த நிகழ்ச்சி சாதாரணமானதல்ல; காங்கிரசார் பதவிக்கு வந்த பின், இப்போதுதான் முதல் முகலாக இந்த நிகழ்ச்சியை நாடு சந்திக்கிறது.

மாகாணத்தின் சுதந்திரத்தைத் தனது ஆதிக்க வெறியால் சூறையாடுகிறது, மத்தியபீடம்.

இந்நிலை எந்த மாகாணத்துக்கும் நேரலாம்.

ஏதாவது ஒரு மாகாணம் தங்களுக்குப் பிடிக்காத முறையில் நடந்துகொண்டால், உடனே இத்தகைய நடவடிக்கையை மத்திய பீடம் எடுக்கும்.

இதற்கான பூரண அதிகாரத்
யும், புது அரசியலமைப்பு மூ
பெற்றுக்கொண்டிருக்கிறது, டில்

அதற்கேற்ப, மாகாண கவர்
களையும் தானே நியமிக்கவும், தன
குக் கட்டுப்படுபவர்கள் அவர்கள்
கிற 'பிடி'யையும் மத்தியபீடம் பெ
றிருக்கிறது.

அதோடு, ஒரு மாகாணத்துக்
கவர்னராக வருபவர் அதே மா
ணத்தைச் சேர்ந்தவராகவும் இரு
க்கக்கூடாது—புது அரசியல் மூல
ஏனெனில், எப்போதாவது கவர்
வந்து, அந்தக் கவர்னரும் தன
மாகாணத்தவருடன் சேர்ந்
கொண்டால், ஆபத்தல்லவா! த
கட்டளைப்படி ஆட மறுத்தா
விளைவு விபரீதமாகுமே.

மத்தியபீடம், தனது ஆதிக்
வெறி, குலையாமலும் மாகாணங்
தம்மிஷ்டப்படி நடக்கக்கூடிய வ
யிலும், தனக்குச் சாதகமான 'வ
வலை'யை ஏற்படுத்திக் கொண்டிரு
கிறது.

டில்லி சர்க்காரின் அணை
அறுத்தெறிவதென்பது இலேசா
தல்ல. அதற்காகப் போரா
துவம்சம் செய்யவேண்டிய போ
டைகளில், இந்தச் சூதும் ஒன்
றாகும்.

இப்போது கீழ்—பஞ்சாப்.

என்றாவது ஒரு நாள், சென்னை
கும் ஏற்படத்தான் செய்யும். டில்
—ஒரு தர்பார் மண்டபம். அதன
குரலை, மதியாதாரை வீழ்த்துமள
ஆளம்பும் அதிகார பலமும் அ
னிடம் குவிந்து கிடக்கின்றன.

ஆகவே, என்றும் மாகாணங்கள்
சுதந்திரத்தோடு நடக்கமுடியாது
முயன்றால், அதன் கதி, அதோகதி
தான்.

பகுத்தறிவு

ஆசிரியர்:- ப. கண்ணன்.

அறிவியல் திங்கள் வெளியீடு
தனிப்பிரதி 0-3-0 ஆண்டுக்கு 2-1-0

விற்பனையாளர் தேவை

சிதம்பரம், தஞ்சாவூர், திண்டுக்
கல், விழுப்புரம், கடலூர் O T
திருவத்திபுரம் (N. A.) திருப்ப
தூர் (N. A.) பெங்களூர், கொளும்பு

பகுத்தறிவு அலுவலகம்

சலகண்டபுரம்.

A. சேலம் மாவட்டம்.

'டெலிவிஷன்' தேவை!

விஞ்ஞானந் தரும் விருந்தோ, உலகத்தை வியப்பில் ஆழ்த்தி விடுகிறது!

சில விநோதங்களோ, நினைத்துக் கொண்டாலே, நெஞ்சு வீங்கி விடும், ஆச்சர்யத்தால்!

விஞ்ஞானத்தின் அறுவடையைக் கண்டு ஆனந்தங் கொள்ளாதவர் எவருமே இருக்க முடியாது!

விஞ்ஞானம் ஒரு வளரும் நட்சத்திரம் — நட்சத்திரம் வளர வளர அதன் ஒளியின் அளவும், பரவும் பரப்பும் விரிந்துகொண்டேதானே போகும்!

இதுவரை, விஞ்ஞானத்தின் விருந்தை நாம் சுவைத்தவர்களே தவிர, சமைத்தவர்களல்ல!

விருந்தை வெளிநாட்டார் படைத்து அழைத்தால், போய் அருந்திவிட்டு, குறை பேசியிருக்கிறோமே தவிர, வேறெதையும் சொல்லக் கற்றுக்கொண்டோமில்லை.

அகல் விளக்கைத் தாண்டி, அரிக்கன் விளக்குகூட, சொந்த மூளையிலே வந்ததாகக் கூற முடியவில்லை. இது குறித்து வெட்கமோ, வேதனையோ கூடத் தோன்றவில்லையென்றால், நாம் என் செய்வது!

விஞ்ஞானம், நம்மிடம் மாற்றாந் தாய் மனப்பான்மையிலே நடந்து கொள்ளாவிட்டாலும், நம்மில் சிலர் அதனை மாற்றாந் தாயாக்கி விட்டு, மனதில் வந்தபடியெல்லாம் கற்பனை செய்து கண்டபடி பேசியிருக்கிறார்கள். பேசும் பிரமங்கள் இருக்கத்தான் செய்கின்றன!

சூரியனை தேவனாக்கி, தேரைக் கொடுத்து, சாயா தேவியையும் பக்கத்திலமர்த்தி, ஒற்றைச் சக்கரத்தையும் பூட்டிவிட்டு வணங்கியிருக்கிறார்கள்.

சந்திரனையும், தாரையொடு 'தாறுமாறாக' நடக்கவிட்டுத்தான் தொழுதிருக்கிறார்கள்.

நட்சத்திரங்களை, தேவர்களாகக் கண்டனரே தவிர, அவைகளை பூவுலகைப்போல பன்மடங்கு பெரிய அளவில் உள்ள உலகங்கள் என்பதை யுணரவில்லை.

விஞ்ஞானம், ஒருகால வேகத்தின் கண்ணாடியென்பதை மறந்து, விஞ்ஞான வளர்ச்சியை, விபரீதக் கண்ணாடி மாட்டி, விளங்காத அர்த்தங்கள் கூறி எதிர்த்திருக்கிறார்கள்.

ரேடியோ, இன்று காலை, மாலையில் திருப்பாத, கரங்கள் இல்லையென்று சொல்லலாம். காலையிலே, ரேடியோவைத் திருப்பிவிட்டு விட்டு, பிறகுதான் விபூதிமடலைத் தேடியிருக்கும் — திருவாசகத்தைப் புரட்டியிருக்கும் — தேவார ஏட்டைப் பிரித்திருக்கும் அந்தக்கரங்கள்! இருந்தும் அதற்குப் பெயர் வைக்கப்போகிறார்களாம் ஆகாசவாணியென்று! இந்தியாவிலே இந்தப் பெயர் வழங்குமாம்!

விஞ்ஞானம் இவர்கள் வீட்டுக் கிள்ளுக்கீரைபோல நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் — ஏனெனில், அயல்நாட்டார் சிந்தனை கருவிலிருந்தாக அது போய்விடுவதால், அதில் புதைந்துகிடக்கும் புதுமைப் புதையலும், அதனைத் தோண்டியெடுக்க மனித மூளைவிடும் பெருமூச்சும் அவர்களுக்குத் தெரிவதில்லை. இல்லாவிட்டால், ஆகாசவாணியென்று பெயரிட்டு, புதுமையை, பழமைப் பெயரால் அழைத்தாவது திருப்தி தேடுவார்களா!

அதுபோலத்தான், பறந்துசெல்லும் விமானத்தைக் கண்டதில்லை இவர்கள். ஆகாய விமானம் வந்தால் மட்டும், 'ஆகா, அது இராமாயணத்திலேயே வருகிறதே, சீதையைக் கவர்ந்த இராவணன் எதில் சென்றான், புஷ்பக விமானத்திலன்றோ? அதைவிடவா இது' என்று நாக்கு குளறாமல் பேசுவர். இவர்களாவது பாமரர் — இவர்களைப் பரிபாலிக்கும் சர்க்கார், பறந்திடும் விமானத்திற்கு அனுமான் என்று பெயரிட்டனரே. இதனை எங்கே சொல்வது? எப்படிக்கூறுவது?

* * *

இந்த நாட்டில்தான் இந்த விசித்திரத்தைப் பார்க்கமுடியும்!

புதுமையைக்கூட, பழமையைத் திரையிட்டு பார்த்து மகிழ்வதிலே பெரு மகிழ்ச்சி காண்கிறார்கள்.

ரேடியோவை, ஆகாசவாணியென்று கூப்பிட்டு ஆனந்தமடைகிறார்கள்!

விமானத்தை, அனுமான் என்று அழைத்து, அதனால் பழமை பாதுகாக்கப்பட்டது என்று தப்புக் கணக்கு போடுகிறார்கள்.

விஞ்ஞானம், இந்த வீணர்களுக்குப் பயந்து கொண்டு தனது புதுமைக் கரத்தை விரிக்காமலிருந்து விடவில்லை. அது, தன் விநோத சிறகசைத்து, விசித்திர வானத்திலே, புதுமை கீதம்பாடி பறந்து சென்றிடும் வானம்பாடியாகவேஇருக்கிறது!

தன்னையே கேலி பேசிடுவோரானாலும், அவருக்கும் தனி இன்பத்தைத் தந்துதான் மகிழ்கிறது!

ஆனாலும், ஏடுதாங்கிகள் மட்டும், தங்கள் இரட்டைநா போக்கை நீக்கிக் கொள்ளவில்லை.

புதுமை பொம்மையானாலும், அதற்கு பழமையாடை உடுத்தி, பழம் பெருமை பேசியே தம் பிடி இன்னமும் கெடவில்லையென்று எண்ணிக்கொண்டு ஏமாறுகின்றனர்.

விஞ்ஞானத்தின் கருவுயிர்ப்பு தானே இந்தக் கருவி — இது நமக்கு எவ்வளவு உதவி செய்கிறது, எவ்வளவு பயனை அனுபவிக்கிறோம் என்று சிறிதும் சிந்திக்காமல், எல்லாம் என்ன, அந்தக் காலத்தில் இல்லாததை விடவா, இந்தக் காலத்தில் என்று பேசி, காலமாற்றத்தால் உலர்ந்த பழமை நாவில், பசை தடவிக் கொள்கிறார்கள்.

உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யாதே — உப்பிட்டவரை உள்ளளவும் நினை — என்பவர்கள் தான், விஞ்ஞானத்தின் பயனை, விதவிதமாக, வகை வகையாக அனுபவித்துக் கொண்டு வசை பாடுகிறார்கள்.

அவர்கள் வஞ்சக நெஞ்சம் கொட்டும் வசையைக் கூட இசையாக ஏற்று விஞ்ஞானம் விருந்தளித்தபடியே உள்ளது. துரோகிக்கும் அன்பைப்படைக்கிறது.

* * *

விஞ்ஞானத்தின் சமீப கால குழந்தை டெலிவிஷன்.

(7-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி 1—7—51 ஞாயிறு

நம்மாள்வார்!

★

நான் பிறந்த பொன்னுடு இது-நான் புரக்கும் நன்னுடும் இதுவே!

மன்னன் நான்-ஆகவே மணிமுடி சூடி, செங்கோலேந்தி மக்களை வாட்டி, வரியைக் கறந்து மந்தகாச வாழ்வு வாழ்ந்திடவேண்டும் என்பது அல்ல, எனக்கழகு!

மன்னன் வீரனுனல், தன்னுட்டில் வரி வாங்காமல், தரணியாண்டான் என்ற தங்கவார்த்தைகள் மக்கள் இதயத்தில் ஒளிவிட வேண்டும்.

கொடுங்கோலர்கள் நாடுகளின் மீது படையெடுத்து அவர்தரும் யுத்த காணிக்கையால், தன்னுட்டை ஆள்பவனே மன்னன்-மாவீரன்!

பழந்தமிழ் மன்னன் ஒருவன், கூறியதாக, இப்படியொரு பாட்டு-புறந்தரும் கருப்புக் கருத்து இது! மன்னன் வீரனுனல், மக்களிடம் வரியென்று நெருங்கிட மாட்டான். எரி கண்களையோ, தலைசொரிந்திடும் காட்சியோ இருக்காது என்றான் அவன்.

அப்படியே வரி வாங்கவேகூடாது என்று கூறவில்லை-வரிபெறும் உரிமை நம்மாள்வாருக்கு உண்டு. ஆனல் அதற்கு வரம்பு உண்டு—விளிம்பும் வேண்டும்!

வரியென்றால் நம்மாள்வார் கூறிய வுடன் சரியென்று மக்கள் ஆரவாரிப்பர்.

ஏற்கனவே, வரிச்சுமை தாங்காமல் வளைந்துகிடக்கின்றனர் மக்கள். மேலும் புதுவரிகள் போட்டு, பல அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் தேடப் போகிறார்களாம்! எப்படி, வளைந்த முதுகினர், இதனைத் தாங்க முடியும்?

தண்டமிழ் நாட்டு, மன்னன் மனம் வேண்டாம், இந்த நம்மாள்வாருக்கு! வரியென்றால் அதற்கு ஒரு குறி—நெறியுண்டென்ற அரசியல் அரிச்சுவடியையாவது மனதில் இருத்திக் கொள்ள வேண்டாமா?

புதுவரிச் சுமைகள்! ஏற்கனவே மக்கள் நொறுங்கிக் கிடக்கிறார்கள்—இந்த புதிய சுமைகளைத் தாங்கமாட்டார்கள்.

வரியே வாங்கக் கூடாது என்ற நெறியிலே செல்ல வேண்டாம் — புறப்பாட்டுக் குறிப்பிடுவது போல! அளவோடும், அவசியத்தோடும் தான் வரி விதிப்பது முறை யென்பதை உணரட்டும் நம்மாள்வார்!

—✲—

நன்றி

டில்லி மந்திரி மேதாப்புக்கு 10—1—51 அன்று கருப்புக் கொடி காட்டியது சம்பந்தமாக குளித்தலை தோழர்கள் 9 பேர்மீது ஆளவந்தாரால் தொடரப்பட்ட வழக்கில் குளித்தலை சப்-மாஜிஸ்ட்ரேட் இரண்டுநாள் சிறைவாசமும் ரூ 25 அபராதமும் விதித்ததை பொட்டி ஆட்சேபித்து சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் அப்பீல் செய்யப் பட்டிருந்தது. 11—6—51ல் மேற்படி அப்பீலில், கீழ்க்கோர்ட்டு தண்டனையை ரத்து செய்தும், அபராதத்தைத் திருப்பிக்கொடுக்குமாறு உத்திரவிட்டும் தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கு ஆரம்ப முதல் அப்பீலில் வெற்றிகாணும்வரை திருச்சி வழக்கறிஞர் திரு. M. கைலை ஆனந்தர் B. A., B. L., நமது தோழர்களுக்காக, இலவசமாக, வாதாடினர்கள்.

அவர்களது பேருதவிக்கு நாங்கள் மிகவும் கடமைப்பட்டிருக்கிறோம்.

வழக்கை வெற்றிகரமாக நடத்த பொருளுதவியும், வேறு பல வகைகளில் உதவி செய்தும், ஆதரவு தந்த தோழர்களுக்கும் எங்களது பணிவான வணக்கங்கள்.

தி. வீ. முத்துகிருஷ்ணன்,
செயலாளர், தி. மு. க.
குளித்தலை.

8-ம் பக்கத் தொடர்ச்சி

பஞ்சாங்கம் புரட்டுவார் — சகுனம் பார்க்காமல், அடியெடுத்து வைக்க மாட்டார்.

ஆண்டவன் ஒன்று என்பார் பொதுவில் — விநாயக சதுர்த்தி முருக பக்தி, நடராசர் தரிசனம் மாரியம்மன் உற்சவம் எல்லாம் செய்வார்.

சாதிகள் இல்லை என்ற வெறுமையில் ... வேறில்லை என்று பேசுவார். ஆனல் தன்பெண்ணைத் தருவாரா, அந்த சாதிக்காரனுக்கு—மாட்டார்.

ஆடு கின்றாம் புலையனேனும் ... சன் பக்தனாயின், அவர் கண்ணாம் யாம் வணங்கும் தெய்வம் என்று பாடுவர். ஆனல், தெருவில், தாழ்த்தப்பட்டோனைக் கண்டால் துள்ளிக் குதிப்பர்—'ஆகா, அம்முட்டுக் காயிப் போச்சோடா, தொடுக்கு கூடாது — ஒட்ட நறுக்கிவிடுவேன் வாலை' என்று பேசிடுவர். தவளை போலக் குதிப்பர்.

இந்த நாட்டையே ரேடியோ நிலையமாக்கி, டெலிவிஷன் முறையின் மூலம், குரலையும், செயலையும் கேட்கவும் காணவும் செய்தால் எவ்வளவு வேடிக்கையாக இருக்கும்?

பம்பாயில் நடக்கவிருக்கும் பொருட்காட்சியின் செயலாளர் ஒய். ஏ. பஸல்பாய் அண்மையில் தான் ஐரோப்பா சென்று திரும்பினர். அவர் இந்த பொருட்காட்சி ஏற்பாட்டிலே டெலிவிஷனும் இருக்கிறது என்று அறிவித்துள்ளார்.

அந்த டெலிவிஷனைப்போல— சமூக டெலிவிஷன் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டால், இந்நாட்டில் உலவும் அர்த்தநாரீஸ்வரர்கள் அம்பலத்திற்கு வருவர்.

நாக்குக்கும், கரத்திற்கும் சம்மந்தமே வைக்காத குணசீலர்களின் குணக்கேட்டை, படமாக்கிக் காட்டி, மக்கள் கைகொட்டிச் சிரிக்கச் செய்ய முடியும்! அதற்கு டெலிவிஷன் வேண்டும்.

ஆகவேதான் டெலிவிஷன் வேண்டும்—விஞ்ஞானத்தின் பெருமையைக் காட்ட மட்டுமல்ல, இந்நாட்டையே விபரீதபுரியாக்கித் திரிவோரை நாட்டுக்கு அறிமுகப் படுத்த!

✲

5-ம் பக்கத் தொடர்ச்சி

டெலிவிஷன், இளைய மகன், என்றும் எல்லோரும் பாராட்டும் அழகும், அறிவும் கொண்ட மகன், விஞ்ஞானத் தாய்க்கு!

அந்த டெலிவிஷனை முதன்முதல் இந்தியாவில் காட்சியில் வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு பிப்ரவரித் திங்களில், பம்பாயில் நடக்கவிருக்கும் அகில உலக ரேடியோ, எலக்ட்ரானிக் பொருட் காட்சியிலே டெலிவிஷனை வைக்கப்போகிறார்கள்!

டெலிவிஷன், ரேடியோவைப் போல, பல மைல் தொலைவிற்கப்பால் உள்ளோர் பேசும், பாடும் நிகழ்ச்சிகளைக் கேட்கச் செய்வது மட்டுமல்ல; பேசுவோர், பாடுவோரை, நேரில் பார்க்கவும் செய்யும்.

காதுக்கு விருந்து ரேடியோ—காதுக்கும், கண்ணுக்குமே விருந்து டெலிவிஷன்!

பிப்ரவரியில் முதன்முதல் இந்தியாவில் காட்டப்போகிறார்கள்.

விஞ்ஞானம் இந்த அளவிற்கு வளர்ந்து சென்றுள்ளது. ஆனால், இந்தியாவில் கப்பல் விட்டால் பூஜை, விமானம் பறந்தால் தீபாராதனை என்று, ஆளும் வர்க்கத்தார், கற்காலக் காலண்டரைப் புரட்டுகிறார்கள்.

அதுமட்டுமா? பிரதமர் மௌடீகத் திருவிழாக்களில் மஞ்சள் நீராட்டம் ஆடுகிறார். ஜனாதிபதியோ, இடிந்த கோயிலைக் கட்டி கும்பாபிஷேகம் செய்கிறார். ஆளும் கட்சித் தலைவரோ, யாகம் செய்கிறார்! இப்படி இவர்கள் கடிகாரத்தை திருப்பி ஓட்டுகிறார்கள்!

டெலிவிஷன், எவ்வளவு உபயோகமானது என்பது கிடக்கட்டும்—மனித கற்பனைக்கும் கட்டுப்படாத கனவுத் திட்டத்தையும் நினைவாக்கிக் காட்டிய அற்புத முயற்சி! அதனை பாராட்டும் பண்பும், வியந்து கூறும் பெருந்தன்மையும் இங்குள்ளோரில் பலருக்குக் கிடையாது!

ஆறாயிரம் மைல்களுக்கு அப்பாலில் உள்ள இலண்டனில் அட்லி பேசுகிறார்! கும்பகோணத்திலிருக்கும் கும்பேஸ்வரர் கோயிலின் வாசற்படியில் நின்றுகொண்டிருக்கும் குமரன் அவர் பேச்சைக் கேட்கிறான்! அவர் உருவையும் பார்க்கிறான்! கைலை நாதரும், வைகுந்தவாசரும் பக்தர்களுக்குமட்டுமே தெரியும்படி காட்சி தந்திருக்கின்றனரே தவிர, இப்படி, சிறியதொரு பெட்டிக்குள்ளே அடங்கியிருந்துகூடியுள்ள எல்லோருக்கும் அற்புதக் காட்சி தந்ததில்லை!

சிவன் ரிஷபத்தைத் தேடியிருப்பார்-மால் கருடனைக் கூட்டிவா என்று ஆதிசேஷனை அனுப்பியிருப்பார், பக்தர்களின் சத்தம் கேட்டால்!

'கண்ணப்பா, நிறுத்தப்பா' என்று கூறிடவும் ரிஷபமேறித் தான் வந்தார் ஈசன், அம்மை சிவகாமி நேசன். கஜேந்திரன் 'ஆதிமூலமே' என்று கூவியழைத்தாலும், இலக்குமியம்மையாருடன் சொக்கட்டான் ஆடியிருந்த போதிலும், மாலை நிலை குலைய, அங்கவஸ்திரம் சரிந்து விழஓடிவந்தாலும், கருடாழ்வாரைத் தேடித்தான் அலைந்தார்.

ஆனால் அட்லி, எதுவும் இல்லை, திரும்பிவிட்டவுடன் பேசுகிறார்—காட்சியளிக்கிறார்! இது டெலிவிஷன் தந்த விநோதம்!

விஞ்ஞானம், இந்த நூற்றாண்டில் உலகத்தாய் உவந்தாடும் கூத்தைக் கண்டு மகிழ்ந்தளிக்கும் மணிமாலை, டெலிவிஷன்.

* * *

விஞ்ஞானம், நமது வாழ்த்தையும், பாராட்டுதலையும் அள்ளுகிறது இந்த டெலிவிஷன் மூலம்!

ஆனாலும் சில குரல்கள் உங்கள் செவிக்கு வந்து சேரத்தான் செய்யும்!

'என்ன பெரிதாகக் கண்டுபிடித்துவிட்டார்களாம்? நடப்பதைப் படமாக்கிக் காட்டுவது அவ்வளவு பெரிய காரியமா, என்ன! இங்கிருந்த ஞானிகள், ரிஷீஸ்வரர்கள் நிகழ்காலம் மட்டுமல்ல,— இறந்த காலத்தையும் அறிவார்கள்—வருங்காலத்தையும் சொல்வார்கள்' என்று கூறுவர்.

'ஞானக்கண் பெற்ற பெருமான்கள் இருந்த நாட்டிலே இந்த நாத்திக முறை என்ன செய்துவிடமுடியும்' என்று பேசுவர்.

டெலிவிஷனும்— டெலிவிஷன்' எல்லாம் வெறும் வேஷம் — கடுவிஷம்! திரிகால ஞானிகளை கேலி செய்ய, நாத்திகம் கண்டுபிடித்த நச்சரவம்' என்று பேசிடும் போக்கினர் உண்டு. இவர்கள் அந்த 'பழமை' போதை தெளியாதவர்கள் என்று அர்த்தம்!

இந்தக் குரல்களைக் கேட்டும், விஞ்ஞானம், வீணாக இருந்துவிடவில்லை.

விரோதிப்பவருக்கும், இதம்செய்வது போலவே நன்மை செய்கிறது!

விஞ்ஞானம் இப்படி மனித உழைப்பைக் குறைக்கச் செய்யும் வசதியை விரிவாக்கும் பலநன்மைகளை மறந்து விடுகிறார்கள்.

அவர்கள் எடுக்கும் தராசும் தவறு—நிறுக்கும் எடைக்கற்களும், தெருவில் பொறுக்கியெடுக்கப்பட்டவை!

அவர்களின் கையிலே உள்ள கஜக்கோல் யாரும் ஒப்புக்கொள்ள முடியாது!

விஞ்ஞானத்தை வெறுப்போர் கூறும் காரணங்களிலே மிகத் தலைமையானது, யுத்தக் கருவிகள் பல இதன் உதவியினால்பயங்கரமானவையாக செய்யப்பட்டுள்ளன!

விஞ்ஞானத்தை எதிர்ப்போர் பலரகம்—அவர்கள் காட்டும் வெறுப்பின் அளவிலும் பலஏற்றத் தாழ்வுகள்! ஆனால் இந்தக் காரணம் சொல்பவர்கள் விசித்திர சித்தர்கள் — படித்தவர்கள், உலகறிந்தவர்கள்—பழமையை விரும்பாதவர்களுமல்ல — வெறுக்காமலிருப்பவர்களுமல்ல! அவர்கள் தான் இந்தக் குற்றச் சாட்டைச் சாட்டுகிறார்கள்.

யுத்தகால ஆயுதங்கள், விஞ்ஞானத் துணையினால், விபரீதமாக்கப்பட்டுள்ளன. உண்மை. ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அதற்குக் காரணம் விஞ்ஞானமா? இல்லை.

விஞ்ஞானம், குழைத்து வைக்கப்பட்ட, வண்ணச் சுண்ணம். அதனைக் கொண்டு, அழகான பெண்ணின் உருவையும் தீட்டலாம், அல்

மகிழ்ச்சி!

தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., வின் துணைவியார், தோழியர் டாக்டர் விசாலாட்சிஅம்மையார் 20—6—51-ல் ஆண்மகவை ஈன்றுள்ளார். 'இளஞ்செழியன்' தோன்றிய செய்தி கேட்டு மட்டிலா மகிழ்ச்சியடைகிறோம்!

வது கோரமான குரங்கின் உருவையும் எழுத முடியும்!

குரங்கு எழுதப்பட்டால், குற்றம், அந்தக் கலர் கிண்ணத்தின் மீதா? அல்லது எழுதும் ஓவியன் மீதா? யோசியுங்கள்!

பழைமை விரும்பிகள் பாணியிலே, சமாதான பிரியர்கள் என்ற பெயரிலே விஞ்ஞானத்தைக் குறைத்துப் பேசுவோர், பழித்துரைப்போர் வளரக் கூடாது!

கிடைத்திருக்கும் வர்ணத்தைக் கொண்டு, அழகழகான திரைகளை அமைக்கலாம்—நல்ல நந்தவனமும் எழுதலாம் — நாறிப்போன சாக்கடைத் தோற்றத்தையும் காட்டலாம். குற்றம், தீட்டப்படும் வர்ணத்தையும் சாராது — எழுதுகோலையும் பாதிக்காது — எழுதும் கலைஞனைத்தான் போய்ச் சேரும்.

அப்படித்தான், அணுக் குண்டைக் காட்டி, ஆத்திரக்குரல் கிளப்பிடும் அன்பர்கள், அது, விஞ்ஞானத்தின் குற்றமல்ல, அதனை அந்த விபரீத போக்குக்கு இழுத்துச் செல்லும் மனிதனுடைய குற்றம் என்பதை உணர வேண்டும்.

அம்பை நோகாதே — வில்லைப் பார்—வில்லையும் நோகாதே—அதனை வளைத்து நாணேற்றி அம்பைவிடும் வேடனைக் கேள் என்று அடிபட்ட புறாவின் சொந்தக்காரனிடம் சொல்ல முடியும்.

அதுபோலத்தான், விஞ்ஞானத்தின் தீ.முனையால், மனித சமுதாயத்தை அழித்திடும் நாசகாலர்களைத்தான் கண்டிக்க வேண்டும். அமைதி நாடி ஓடுவோர், சமாதானம் தேடி பாடுவோர்.

செல்லரித்த ஏடுகளின் 'வாரிசுகள்' பேசுவதுபோல, செகத்தின் சுகமே எங்கள் சுகம் என்று பேசிடுவோரும் போவது தகாது!

விஞ்ஞானம் அணுகுண்டுமட்டும் தந்துவிடவில்லை — டெலிவிஷனும் தருகிறது!

விஞ்ஞானம், பெண்களின் கண்களைப்போல—வள்ளுவர் கூறுவது போல நோயையும் தரும், அதுவே நோய் தீர்க்கும் மாமருந்தாகிவிடும்!

அணுகுண்டு கண்டு அலறித் துடித்து வசை மாலை அணிவித்துவிட்டால், டெலிவிஷன் கண்ட பொழுது என்ன செய்வது?

ஆகவேதான், குற்றம் எதன்மீது என்று ஆராய்ந்து குறை கூறுவோர் எண்ணிப் பார்க்கவேண்டும்.

டெலிவிஷன் தந்தது விஞ்ஞானம்—அதற்காக வியக்கிறோம், நன்றி செலுத்துகிறோம் என்று தான் கூறமுடியும், நேர்மை நினைப்பினரால்.

* * *

டெலிவிஷன் இந்த நாட்டிற்கு மிக மிகத் தேவை—இந்த டெலிவிஷன் மட்டுமல்ல, இன்னும் சக்தி வாய்ந்த டெலிவிஷன் தேவை!

ரேடியோவில் சீதா கல்யாணம் நாடகமாக்கப் பட்டால், — 'டெலிவிஷன்' தோற்றத்தில் என்ன தெரியும்? சீதை, வெல்வெட்டு செருப்பும், 'ராஜகுமாரி' பார்டர் போட்ட கிளிப் பச்சைப் பட்டுப் புடவையும் நலுங்காமல், பிரம்பு நாற்காலியில் அமர்ந்திருப்பது தெரியும் — சில்க் ஜிப்பா, கலையாத விசிறிமடிபோட்ட ஜனகர்-கோட்டும், சூட்டும் மாட்டிய இராமர், இன்னும் விசித்திர உருவங்களில் திருமணமண்டபத்தில் கூடியுள்ள மன்னாதிமன்னர்கள் எல்லாம் தெரியும்!

பேச்சு வேறு-உருவங்கள் வேறாகத் தோன்றும்!

அதுபோலவே, பேச்சொன்று செயலொன்றாக இருக்கிற காட்சியைக் காணலாம்.

மகன் மகாலிங்கம், மருத்துவ காலேஜில் எம். பி., பி. எஸ் பரிட்சைக்கு விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருப்பான். அவனை, புரோகிதம் செய்தே பணம் சேர்த்து அனுப்பிப் படிக்கவைக்கிற, சுப்ரமணிய சாஸ்திரிகள்' இப்போ காலங் கெட்டுப்போச்சு, தலைவலியானாலும் குலைவலியானாலும், எதற்கெடுத்தாலும், ஊசின்னு தூக்கிக்கிறான், என்று பேசுவார்.

எலக்ட்ரிக் இன்ஜினியர் வேலை பார்ப்பான் மகன், ஆனால், ஆண்டவன் ஆலயத்திலே உள்ள விக்கிரகத்தின் முகத்திலே வீசும் தேஜஸைப் புகழ்வார் தந்தை!

அதுமட்டுமா? பள்ளிக்கூடத்தில், நியூடன் ஆராய்ச்சியை விளக்குவார்—தாமஸ் ஆல்வா எடிசனைப்பற்றிப் பேசுவார்—மார்க்கோனி புகழ்பாடுவார்—ஆனால் வீட்டிற்கு வந்ததும்

6-ம் பக்கம் பார்க்க

நமது அனுதாபம்

சுயமரியாதை இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவரான பூவாளூர் தோழர் பொன்னம்பலனார் அவர்களின் அருமைத் தாயார் 27-6-51 அன்று, காலமானார் என்ற செய்தி அறிய திடுக்கிட்டோம். வாழ்வின் சுக துக்கங்களை நன்கு அறிந்த அவருக்கு, சாவுபற்றி ஏதும் கூற வேண்டியதில்லை எனினும், நமது இதயத்தில் எழும்பிய வருத்தத்தை அவருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இந்தக் குடும்பம்!

இருந்தால் இப்படியல்லவா இருக்கவேண்டும்! 'எங்கக்குடும்பம் பெரிசு, எங்க இளையவர் குடும்பம் சிறுசு' என்று பாடுவர். இதோ, 'இந்தக் குடும்பம் பாரு' என்று பாடத்தோன்றும், உங்களுக்கு!

தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் தலைவராக தோழர் எம். ஏ. சிதம்பரம் செட்டியார் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்!

இந்தச் செய்தியைப் படித்ததும்தான், உங்களுக்கு அந்தப்பாட்டு நினைவிற்கு வரும். ஏன்தெரியுமோ? இதற்கு முன்னால், இந்த சங்கத்தின் தலைவராக தோழர் ராமநாதன் செட்டியார் இருந்திருக்கிறார். இருந்தால் என்ன என்கிறீர்களா? அவர், இவரது அண்ணன்! அவருக்குமுன்னால், ராஜாமுத்தைய செட்டியார், அதே பதவியை வகித்திருக்கிறார். அவர், இவர்கள் இருவருக்கும் மூத்தவர்! அவருக்கு முன்னால் ராஜா சர் அண்ணாமலைச்செட்டியார் இந்த ஸ்தாபனத்தின் தலைமை பீடத்திலே இருந்திருக்கிறார்! அவரோ, மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்த தந்தையார்! எப்படி, இந்தக் குடும்பம் — இப்பொழுது என்ன சொல்கிறீர்கள்?

அதுமட்டுமா? இப்பொழுதுகூட மூத்தவர் சட்டசபை உறுப்பினர், அடுத்தவர் சென்னை மேயர், மூன்றாமவரோ, வழி வழிவந்த, வர்த்தக சபை தலைவர்—இனி பாடுவீர்கள்,

எந்தப் பதவியும் சேரும்!
விந்தைக் குடும்பம் பாரு

என்று! அதனால்தான், இருந்தால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று கூறாமலிருக்க முடியவில்லை!

3-ம் பக்கத் தொடர்ச்சி

காட்டுகிறதே யொழிய, சரித்திரமாக இல்லை.

பல உண்மைகள் தமிழக மண்ணோடு கிடக்கின்றன.

இவைகள் யாவும், தோண்டப்பட்டால்தான், நமக்கான ஒரு சரித்திரம் கிடைக்கும்.

ஆனால் இந்த முயற்சியிலீடுபடக் கூடிய புதை பொருள் ஆராய்ச்சி இலாகாவோ நம்மிடமில்லை; டில்லி வசமிருக்கிறது.

இந்நிலையில், நாம் எப்படிப் பெற முடியும் சலுகையை!

நமது சரித்திரத்தைப் பெற வேண்டுமானால், அதற்கான ஆர்வமும் உழைப்பும் தேவை.

ஆனால் அது எப்படிக் கிடைக்கும் வட நாட்டாரிடமிருந்து.

இதை, உணர வேண்டும் — உணர்ச்சி பெற்றிருப்போர்.

அதிகாரம் நம்மிடமில்லாத ஆர்வத்தால் வேண்டுவதும் சோருவதும் பலனைத் தராது.

புகார் போனோம்; பேசினோம்; திரும்பினோம் — என்றளவில்தான் முடியும்.

நம்மவரிடையே அரும்பும் புது மலர்ச்சி, ஆவேச வெறியோடு நின்று விடக்கூடாது.

செயலாக மாற புகார் செய்வதாலோ, வேண்டுகோள் விடுப்பதாலோ பயனேற்படாது.

இதை உணரவேண்டும் புகார் சென்றோர். புகார் செய்வதோடு நின்றுவிடக் கூடாது. 'இவர், இனியெல்லாம் புகார்—ஏதோ பேசுவார், போவார்' என்ற இகழ்ச் சொல்லுக்கும் ஆளாகக்கூடாது — உணர்ச்சி பெற்றிருப்போர்.

புகார் போனோம்; கலங்கினோம் சர்க்காருக்குப் புகார் செய்தோம்; இந்தப்பிரச்சினைகளிலெல்லாம் இவர்கள் புகார்' என்கிற பழியைத் துடைத்துக் கொண்டோம் என்கிற நல்லுணர்வு வேண்டும், புது உணர்ச்சி பெற்றிருப்போருக்கு— நமது சரிதம் உருவாக, துயரமேகம் விலக, நம்மை நாம் அறிய.

✲

புது வலி?

பழமை விரும்பிகளின் பலத்த எதிர்ப்பு, சனாதனிகளின் சல்லடம், வைதீகபுரியின் வம்புக் கூத்து, ராண்டல் கூட்டத்தின் சூது, இத்தனைய இடுக்கண்களுக்கிடையே சென்னை சர்க்கார் நிறைவேற்றிய மசோதா— இந்து அறநிலையப் பாதுகாப்பு பற்றியதாகும்.

இந்த இந்து அறநிலையப் பாதுகாப்பு மசோதாவுக்குத் தமது அங்கீகாரத்தை, டில்லித் தலைவர் ராஜேந்திரபிரசாத் தரவில்லையென்றும், மறுத்து மசோதாவைத் திருப்பிவிட்டாரென்றும் செய்திகள் வந்தன சின்னாட்களுக்கு முன்பு.

இச்செய்தி நம்மைத் திடுக்கிடச் செய்தது. ஏனெனில் மடாதிபதிகள், கோயில் பெருச்சாளிகள் ஆகியோருடைய கொட்டங்களை அடக்கவேண்டும் என்கிற ஆவலோடு, கொண்டுவரப் பட்டதாகும் இந்த மசோதா.

ஓமந்தூராரின் பெரு முயற்சி காரணமாகக் கொண்டுவரப்பட்ட இம்மசோதாமீது, 'அல்லாடி' வர்க்கம் கச்சை கட்டிக்கொண்டெழுந்ததையும், அதுபோது திராவிடரியக்கத்தாராகிய நாம் கேடயமாக நின்றதையும் நாடு அறியும்.

ஆகவே, இந்திய ஜனாதிபதி மறுத்தார் என்றதும், 'கம்யூனல் ஜி. ஓ' போல, இதுவும் பெரிய பிரச்சினை ஆகிவிடுமோ என்றெண்ணினோம். சென்னை சர்க்காருக்கு டில்லியால் இது தலைவலி ஏற்படுமோ, என்றும் கருதினோம்.

ஆனால், இந்த மசோதாவை டில்லி மறுக்கவில்லை என்றும் சில விளக்கங்களுக்காக, டில்லித் தலைவர் இங்கே திருப்பியனுப்பியிருப்பதாகவும் நம்பத்தக்க இடத்திலிருந்து நமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது.

அதோடு, விரைவில் இம்மசோதா, ஜனாதிபதியின் கையெழுத்தைப் பெறலாமென்றும் கூறப்படுகிறது.

ஆகிறதா அல்லது 'நரிகளின்' சூழ்ச்சி இந்த மசோதாவிலும் தலைகாட்டுகிறதா என்பதைப் பொறுத்துப் பார்ப்போம்.

11-ம் பக்கத் தொடர்ச்சி

விட்டு கண்களை மூடிக்கொண்டு வெகு வேகமாக ஓடி வருகிறார்கள் ஆண்கள், பெண்களை நோக்கியும்! பெண்கள், ஆண்களை நோக்கியும்! இடையில் தடுமாறி விழுகிறார்கள் சிலர்—சிலர் பாதை மாறுகிறார்கள். சிலர் போக்கை மாற்றிக் கொள்கிறார்கள். ஆனால்......ஒவ்வொரு ஆணும் ஒரு பெண்ணை, ஒவ்வொரு பெண்ணும் ஒரு ஆணைத் தவறாமல் தழுவிக் கொள்கிறார்கள் ஒரு இடத்தில்! இப்பொழுதுதான் அவர்கள் கண்களைத் திறந்து பார்க்கிறார்கள். தாம் ஆரம்பத்தில் குறிப்பிட்டவராகவோ, குறிப்பிட்டவளாகவோ பெரும்பாலும் இருப்பதில்லை. ஆனால் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகிறார்கள். அந்த இடத்திற்குப் பெயர்தான் திருமணம் என்று பெயர். இதுதான் இன்று நாட்டில் நடைபெறும் திட்டமாக இருக்கிறது என்று பத்மாவிடம் சொல். அவளைத் தன் இதயத் துடிப்புகளை அடக்கிக் கொண்டு, இன்முகத்துடன் எதிர்காலத்தை நோக்கி நடக்கச்சொல். பார்த்திபனை விரும்ப அவள் மனத்தைத் திடப்படுத்திக்கொள்ளச் செய்! மாங்கனியை நாடிச் சென்று வாழைப் பழம் கிடைத்தாலும் அதனைக் கொண்டு மனதைத் திருப்திப்படுத்திக் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.

வாழ்க்கை பூந்தோட்டத்தில் நான் கசங்கிய மலர் — உன்னைப் போல் மலராத மொக்கல்ல! அப்படித்தான் நான் நினைத்துள்ளேன்.

இனி என் வாழ்வில் திருமணம் என்பதற்கு இடம் இல்லை. என் அடிவான யாத்திரை எங்கு முடிவடையும் என்று தெரியாது. அதையடைய ஒரு மார்க்கம் கண்டு பிடித்திருக்கிறேன். அதுதான் இளம் பிள்ளைகளுக்கு அறிவூட்டும் இந்த அறத் தொண்டு—ஆசிரியை வேலை. சரிதானே, லீலா?

(தொடரும்)

★

டம்ப்ரீஸ்!

மணிலாப் பயிறிலிருந்து நூல் எடுக்க முடியும்!

இந்நூல் கம்பளி, பருத்தி வேறு எந்த வகை நூலோடும் இணைத்து நெய்யலாம்!

* * *

நூலில்லை, நூலில்லை என்று நெஞ்சு நோக, நாவரள கூவுகிற நெசவாளிகளின் வேதனைக் குரலைக் கேட்டுக் கேட்டு வெம்பிப்போன சர்க்காரின் காதுகள், அவர்தம் கண்களுக்கு தூதனுப்பி, அவை நுணுக்க ஆராய்ச்சியாளர்களுக்கு கட்டளை அனுப்பி அவர்கள் கண்டு பிடித்துவிட்ட உண்மைகள் அல்ல—மேலே உள்ளவை!

இந்த ஆராய்ச்சியும், அதிலே வெற்றியுங் கண்டது, இங்கல்ல, ஸ்காட்லாந்தில்! டம்ப்ரீஸ் என்ற இடத்தில், ஒரு பெரிய தொழிற்சாலையே இதற்காக ஏற்பாடு செய்துள்ளார்கள்.

யுத்த காலத்தில், இங்கிலாந்தில் விநோதமான சூட்டுகள் அணிந்து மக்கள் உலவினர்.

படுக்கை விரிப்புகள், தலையணைகள், குல்லாய் இன்னும் பல விசித்திரமாக இருந்தன.

சென்ற யுத்த காலத்தின் பொழுது இம்மாதிரி, நூல் நெசவில் கண்ட நூதனம்தான் இது!

வெளியோட்டை உடைத்துவிட்டு, சிகப்புத்தோலை நீக்கிவிட்டு, பிறகு எண்ணெயும் எடுத்துவிட்டு, மிகுதியாகிற பயிறில், ரசாயன நீர் கலந்து இந்த நூலைச் செய்கிறார்கள்.

இந்த ஆண்டில் 3,500 டன் உற்பத்தி செய்ய முயற்சி எடுத்துள்ளனர்.

இந்த, தொழிற்சாலையைப் பார்வையிட்ட, போர்ட்ரம் மாகாக் என்பவர், மே மாதத்தில் இலண்டன் ரேடியோவில் பேசியுள்ளார்.

நூலில்லாக் கொடுமையைப் போக்கச் சொல்லி, நெசவாளர்கள் வேண்டுகோள் விட்டவண்ணமிருந்தனர் — செவிடாகயிருந்தனர். சர்க்கார். ஆகவே அங்கங்கே அறப்போர் தொடுத்தனர்!

காஞ்சியிலே சென்ற வாரம், குறிப்பிட்ட காலம் வரை மறியல் செய்து, தங்கள் குறைகளை எடுத்துக் காட்டியுள்ளனர்.

காஞ்சியில் மட்டுமல்ல, நாடெங்கும் இந்தக் கிளர்ச்சிகள் நடந்தபடியேஉள்ளன. அதன் வளர்ச்சியைச் சர்க்காரும் பார்த்துக்கொண்டுதானிருக்கின்றனர்.

சென்றவாரம், நூலில்லாக் கொடுமையைப் பற்றி, தொழில் மந்திரி, கனம் பெருமாள்சாமியார் உதிர்த்த மணிமொழிகள் மறக்க முடியாதன!

இந்தக் கிளர்ச்சிகள் எல்லாம் அரசியல் சார்புடையனவாம்!

அபாரமான கண்டுபிடிப்பு — கொலம்பஸ், இவர் காலடி நிழலில் நிற்கக்கூட அருகதையில்லாதவன்!

அரசியல் சார்புடையன, நெசவாளர் மறியல்கள் என்று திருவாய் மலர்ந்தருளிய, மந்திரியார் ஒரு சந்தேகத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்!

நூலில்லை என்ற குரல், உண்மைபடாததோ? இல்லை, கனமே சொல்கிறார். இந்த நூல் தட்டுப்பாட்டிற்குக் காரணம்—நமக்குத் தேவையானது 30,000 பேல்கள். ஆனால் தருவதாக ஒப்புக்கொண்டதோ, 22,500 பேல்கள், எனினும் இதுவரை கொடுத்து வந்துள்ளதோ, சராசரி 16,000க்கு மேல் இல்லையென்கிறார்!

கைப்புண்ணை மறைக்க கண்ணாடி தேடுகிறார் கனம்—கண்ணாடியில்லாமலே, காணக்கூடிய புண் அது! அதைக் கொண்டே மறைக்கப் பார்க்கிறார் கனம்—அரசியல் சார்புடையன என்ற ஓட்டைக்காரணத்தைக் காட்டி உண்மையை மறைக்க முடியுமா?

நெசவாளர்கள் கோரிக்கைகள் பொய்யானவை, அநியாயமானவை—வெறும் அரசியல் காரணங்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் என்றாலாவது கொஞ்சம் சிந்திக்காவது மனம் போகும் மக்களுக்கு!

குறையுண்டு நிறைய, இருந்தாலும் கூறக்கூடாது வெளியே என்றால் எப்படி முடியும்?

முன்னர் வந்து சென்ற ஹரி கிருஷ்ண மேதாப் சென்னை வருவதாலே, ஊர் சுற்றி உபசார மொழி பேசுவதாலே, மந்திரியார் அவர் பின் வாலாக, இல்லை, நிழலாகத் திரிவதாலே, நெசவாளர் குறை தீருமா?

இவர்களை, விஞ்ஞான ஆராய்ச்சியிலீடுபட்டு, மாகாக் கண்ட மணிலாப் பயிறு நூல் போலக் கண்டுபிடித்துத் தரச் சொல்லவில்லை—ஏனெனில், அவர்களுக்கு, 'அது' அவ்வளவு விசாலமானதும் அல்ல; நமக்கும், அவர்கள் அவ்வளவு அபார சிந்தனையாளர்கள் என்று நம்பி ஏமாறும் அளவு பஞ்சமில்லை, அந்த விஷயத்தில்!

நூல் கேட்கிறார்கள் என்றால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இங்கு உற்பத்தியாகும் நூல், அவர்கள் தேவைக்கு மேல் அதிகமாக உள்ளது என்பது! ஆனால் அதனை டெல்லிக்கு அனுப்பிவிட்டு, பிறகு கெஞ்சிக்கொண்டு நிற்கிறார்கள், கோமாளிகள்போல! அதனால்தான் மறியல் செய்து, அவர்தம் மரத்துப்போன மனத்திற்கு உணர்ச்சி ஏற்றுகிறார்கள்!

மேதாப்பிடம் மண்டியிடத் தேவையில்லை. நம்மிடம் உற்பத்தியாகும் நூலை, நம் தேவைக்குப் போக, மிகுதியை வெளியிடங்களுக்கு அனுப்பும் உரிமை நமக்கிருந்தால்!

டம்ப்ரீஸ் அல்ல. சென்னை — மாகாக் அல்ல, மந்திரி பெருமாள் சாமி — இவை, நமக்குத் தெரிந்தவை!

ஆகவேதான், நெசவாளர்கள் இவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கவில்லை. இருப்பதையும் கொடுத்துவிட்டு, ஏங்கித்தவிக்கவிடுகிறார்களே ஏன் என்று கேட்கிறார்கள்.

அதனால்தான் அங்கங்கே அறப்போர் தொடுத்து நடத்தினார்கள்—நடத்துகிறார்கள் நெசவாளர்கள்! அவர்கள் நூலுக்கு, நீதியடிப்படையிலே போராடுகிறார்கள். அவர்களை நாடு பாராட்ட மறக்கவில்லை. அவர்களுக்கு வெற்றி நிச்சயம்!



தொடர் கதை

யாத்திரை

தில்லை-வில்லாளன்

2

லீலாவுக்கு

மங்கை

[ஓடிய கதை:- சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண்டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திருமணத்திற்கு வர முடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினாள் பத்மாவின் தங்கை, லீலாவின் இளந்தோழி மங்கை அவள் வாழ்விலேயும் ஒரு புயல்... தெப்ப உற்சவம் பார்க்கச் சென்ற இடத்தில் தினகரனைச் சந்திக்கிறாள். அவனோ அவளை வஞ்சித்து விட்டான்.]

லீலா, அந்த மனித விலங்கை பட்டந்தட்ட ஏதாவது திட்டமிருந்தால் சொல்லேன்...என் மனதிலே ஒரு 'பிளான்' வகுத்திருக்கிறேன். உடன்பிறவா சகோதரர் மாதவனும் ஒப்புதல் தந்துள்ளார்.

அவன் எழுதிய கடிதங்கள் இன்னமும் என்னிடந் தானிருக்கின்றன. நான் எழுதிய கடிதங்களை அவன் எரித்துவிட்டானாம்! இருக்கட்டும். அவன் கடிதங்களை அவன் சேர்ந்துள்ள, ஏதோ பெயர் சொல்கிறார்களே, மக்கள் மன்றம் என்ற கட்சித் தலைவருக்கு அனுப்பி அவனது திருட்டுத் தனத்திற்கு தக்க தண்டனை தரவேண்டலாம் என்பது என் முடிவு. எனக்கு இனி தினகரன் வேண்டியதில்லை. அவனுக்கு ஒரு நல்ல-பாடம், கற்பித்தால் போதும்.

அந்தி வந்தவுடன் அடிவானம் சிவக்கிறது. மனத்திண்மை பிறந்தவுடன் இலட்சியபுரி தெரிகிறது.

கிறான். அதுபோல நம் சுயநலம், படாடோபம், 'அல்டாப்' 'ஹம்பக்' பித்தலாட்டம், வஞ்சனை, சூது, சூழ்ச்சி, பதவிப்பித்து, தான்தோன்றித் தறிதலையாட்டம்..........எல்லாம் மறைந்துவிடும். மறைய வேண்டும்!

சில பகுத்தறிவு வாதிகளைப் பார்க்கிறேன்—சில சமூக ஊழியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களைச் சந்திக்கிறேன். அவர்கள் தாங்கள் எடுத்துக் கொள்ளும் முயற்சி ஒரு கடமையென்றும் கருதுவதில்லை. தொண்டு என்றும் மதிப்பதில்லை. அவர்கள் எப்படி அடிவான யாத்திரையில் கலந்து கொள்ள முடியும்? அத்தகையோர் இடையிலே பிய்த்துக்கொண்டோடி விடுகின்றனர்.

லீலா, என் அனுபவத்தில் கண்ட உண்மை பெற்றோர்கள் மும்பன்று மணம் முடிப்பதில் தவறில்லை யென்பதுதான். ஆனால் நீ வாதாடலாம், தினகரன் மட்டுமில்லை உலகில், சுந்தரும் இருக்கிறார் என்று! சுடுபாலைச் சுவைத்த பூனை "பாலை பகிஷ்கரியுங்கள்" என்று கட்சி கட்டினால் அதனை ஒப்புக்கொள்ள முடியுமா என்று கேட்பாய். உண்மை. ஏமாற்றத்தின் விளைவாக உளறுகிறேன் என்று மட்டும் மட்டமாக மதிப்பிட்டு விடாதே. என் முடிவிலும் உண்மை ஓரளவு இருக்கத்தான் செய்கிறது.

காதலும் கடமையும் மட்டும் உலகத்தை இன்று ஆள்வில்லை. எத்துவாளித்தனமும், ஏமாளித்தனமும் உலகத்தில் நின்று நிலவுகின்றன. ஏய்த்துப் பிழைப்பவனும், ஏமாந்து போகிறவனும் உண்டு எத்தன் இருக்கிறான்; ஆகவே ஏமாளியும் வாழ்கிறான்! ஏமாறுபவர் இருப்பதால்-தானே ஏமாற்றுபவன் வாழ்மொழியை வீசி என்னை அடக்கி விடாதே. ஏமாளியை, எத்தன் வளர்க்கிறான், பெருக்குகிறான். இதை மட்டும் மறந்துவிடாதே.

அதுவும் பெண்கள் ஏமாளிகளாகவே வாழ்கிறார்கள். ஆண்கள் எத்தர்களாக இருக்கிறார்கள்.

இதற்கு சாட்சிகள்......?

இதோ நான், அதோ மிஸ்டர் 'எல். ஸி. எம்.' 'ஜி. ஸி. எம்.'— அதாவது பெரிய காரியங்களை மிகச் சிறியது என்று பேசி, மிகச் சிறிய நிகழ்ச்சிகளை மிகப் பெரியது என்று பிரச்சாரம் செய்திடும் தன்மையாளர் — என் மாஜிக் காதலர் தினகரன்!

ஆகவேதான் பத்மாவின் கடைசி முடிவு சரியென்றும் ஏற்றுக் கொள்கிறேன், ஆயிரம் மறுப்புகள் ஆரம்பத்தில் எழுப்பினாலும்! சுந்தரின் முடிவு என்ன என்று மட்டும் எண்ணிப் பார்த்தால் வருத்தம் வந்து என்னைச் சூழ்கிறது. துக்கம் என் தொண்டையை அடைக்கிறது. அந்த அனுபவம் [illegible]க்கிருக்கிற காரணத்தால்! அவரைப் பார்த்து ஒருமுறை பேசவேண்டும் போலிருக்கிறது. சமயம் வாய்த்தால் நிச்சயங் கண்டு பேசுவேன்.

இதுவரை உன் தமக்கை கதையையும், வழுக்கி விழுந்து ஆனால் இன்று எழுந்து நிற்கும் என் நிலைமையைப் பற்றி பேசிப் பொழுதைக் கழித்து விட்டேன். மன்னித்துக் கொள். துபரம், மடைதிறந்த வாய்க்காலைப் போல!

லீலா, இனி என்ன செய்வதாக முடிவு செய்திருக்கிறாய்? கல்லூரியில் 'இண்டர் மீடியட்' முடித்து விட்டாய் என்று நினைக்கிறேன். என்னைப் போல 'வாத்தியாரம்மா' ஆகப் போகிறாயா? அல்லது இன்னும் படித்து 'டாக்டரம்மா' ஆகலாம் என்பது உன் எதிர்காலத் திட்டமா? அல்லது அக்காவைப் போலத் தங்கையும் யாரையாவது மணந்து வெறும் 'அம்மாவாக' உத்தேசமா? லீலா, எனக்கு இது பற்றி எழுத மறந்துவிடாதே!

லீலா, அடிவானம் என்ற வாழ்க்கைக் கோட்டிற்கு அப்பாலும், இப்பாலும் ஆண்களும், பெண்களும் நிற்கிறார்கள். மிகத்தொலைவிலிருந்து பார்க்கிறார்கள் ஒருவரையொருவர். யாரோ ஒருவரைக் குறிப்பிட்டு

Edited, Printed & Published by C. N. Annadurai M. A. at DravidaNadu" Press
95 Tirukkachinambi Street Kancheepuram